DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 140/2023** | | |
| Deposition of Witness for | PW 1 Recall | | |
| | Prosecution Side Witness | | |
| Name | : **திரு.**அழகுதுரை | | : |
| Father/Husband Name | : த.பெ. திரு. முத்துசாமி | Calling | : விவசாயம் |
| Village | : ஏத்தாப்பூர் | | : |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : 75 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.05.2025

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு, உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

துவக்க நேரம் 04.19

1) எனக்கு எத்தனை மகன்கள் என்றால் 2 மகன்கள், பெரியவர் பெயர் வெங்கடாஜலம், சிறியவர் பெயர் அய்யனார். எதிரி அய்யனார் எனது 2 வது மகன் என்றால் சரிதான். நான் எனது பெரிய மகன் வெங்கடாஜலத்துடன் வசித்து, அவர் வீட்டில்தான் சாப்பிட்டு வருகிறேன் என்றால் சரிதான்.

2) எனது பெரிய மகனின் விவசாய நிலத்தை நான்தான் கவனித்து வருகிறேன் என்றால் சரிதான். நான், எனது பெரிய மகனின் வீட்டில் சாப்பிட்டு வருகிறேன் என்பதால், வாய்மொழி பாகம் பிரிக்கும்பொழுது, எனது பெரிய மகனுக்கு அதிகமாக நிலத்தை ஒதுக்கி, கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

3) எனது சிறிய மகனாக அய்யனார் என்னிடம் வந்து சரிசமமாக நிலத்தை பிரித்து, எழுதி கொடு என்று பலமுறை என்னிடம் கேட்டார் என்றால் சரிதான்.நான்தான் முடியாது என்று சொல்லிவிட்டேன்.

4) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் தோட்டம் என்றால் சரிதான். எனது காட்டிற்கும், வீட்டிற்கும் இடையில் 1 மைல் துாரம் இருக்கும் என்றால் இல்லை 1/2 கி.மீ துாரம் இருக்கும். சாட்சி மல்லிகாவிற்கு நான் சொல்லிதான் சம்பவத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான்.

5) சம்பவத்தின்பொழுது எனக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள் நான் தவறி கீழே விழுந்து ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல. நான் தவறி கீழே விழுந்து ஏற்பட்ட காயங்களை வைத்து, ஒரு தவறான புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

6) நான், எனது பெரிய மகனான வெங்கடாஜலம் என்பவருடன் சேர்ந்துக்கொண்டு, எனது சிறிய மகனுக்கு சொத்தை சரிவர பிரித்து தரக்கூடாது என்ற எண்ணத்தில், என்னை அடித்துவிட்டதாக ஒரு தவறான புகார் வாக்குமூலத்தை கொடுத்து, அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை,

**முடிவு நேரம்** 04.33

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 140/2023** | | |
| Deposition of Witness for | PW 2 Recall | | |
| | Prosecution Side Witness | | |
| Name | : **திருமதி. மல்லிகா** | | : |
| Father/Husband Name | : க.பெ. திரு. வெங்கடாஜலம் | Calling | : டெய்லர் |
| Village | : புத்திரகவுண்டன்பாளையம் | | : |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.05.2025.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு, உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

துவக்க நேரம் 04.34

1) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டெய்லராக வீட்டிலே துணி தைத்து வருகிறேன். அ.சா.1 அழகுதுரை எனது மாமனார் என்றால் சரிதான்.

2) எனது கணவரின் தம்பி அய்யனார் என்றால் சரிதான். எங்களுக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 2 1/2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எனது மாமனார் எங்களுடன் தங்கி, சாப்பிட்டுக்கொண்டு, எங்கள் நிலத்தை எங்களது சார்பாக அவர்தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் நாங்கள் வாடகை வீட்டில் குடியிருக்கிறோம். எனது மாமனார் காட்டில் உள்ள சொந்த வீட்டில் குடியிருக்கிறார். ஆனால் சாப்பாடு எங்களுடன் தான் சாப்பிடுகிறார்.

3) எனது மாமனார் அழகுதுரைக்கும், எனது கொழுந்தனார் அய்யனாருக்கும் அடிக்கடி பிரச்சினை வரும் என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் குறித்து, எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் மகாலிங்கம் என்பவர் மூலம் எனது கணவருக்கு அவர் தகவல் சொல்லி, அதன்பின்னர்தான் எனக்கு தெரியும்.

4) நான் தகவல் கேள்விப்பட்டது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எனது மாமனாருக்கும், கொழுந்தனாருக்கும் இடையே சொத்து பிரச்சினை காரணமாக உள்ள கருத்துவேறுபாட்டிற்காக எனது மாமனார் கொடுத்த ஒரு பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை,
**முடிவு நேரம்** 04.44

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.